# இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகம்

# உயர்கல்வி தலைமைத்துவத்துடன் இணையுங்கள்

## விண்ணப்பங்களுக்கான அழைப்பு
## துணைவேந்தர் பதவி

1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 34 (1) மற்றும் அதன் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் ஆணைக்குழுவின் 03/2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளிற்கு அமைய, இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகத்தின் பேரவை துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களை கோரி அழைப்பு விடுக்கின்றது. 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்திற்கு அமைய துணைவேந்தர் முழுநேர உத்தியோகஸ்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார் பல்கலைக்கழக பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார்.

1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்திற்கு அமைய துணைவேந்தர் பதவி விலகினால் அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்டால் தவிர மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது அறுபத்தைந்து வயதை பூர்த்தி செய்யும் நாள் வரைக்கும் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொதுநிர்வாகம் என்பவற்றிற்கு பொறுப்பானவர். கல்வியில் உன்னதம், நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரி, கல்வியில் மீயுயர்ந்த நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர் பல்கலைக்கழகத்தின் பணி நோக்கம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு குறித்து ஆழமான புரிதல் கொண்டிருக்க வேண்டும். (மேலதிக தகவல்களுக்காக விண்ணப்பிக்க விருப்பமுள்ளோர்/ பரிந்துரை செய்யப்பட்டோர் பல்கலைக்கழகத்தின் வலைத்தளத்தின் இணைப்பினை https://www.rjt.ac.lk/vacancies/ பார்வையிடுமாறு அழைக்கப்படுகின்றார்கள்)

துணைவேந்தர் பல்கலைக்கழக முறையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

விண்ணப்பத்துடன் கீழ்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்:

- விண்ணப்பதாரியின் பிறந்த திகதியினை உள்ளடக்கிய முழுமையான சுயதகைமை விபரப்பட்டியல். (விண்ணப்பதாரர் இலங்கை பிரஜையாகவும் விண்ணப்பம் முடிவுறுத்தபதபடும் நாளில் 63 வயதுக்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பிறப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டையின் பிரதியை சுயதகைமை விபரப்பட்டியலுடன் இணைக்க வேண்டும்)
- விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.
- தற்போது இப்பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி எனின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்பட முடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் 'பதிவாளர்/ பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகம், மிஹிந்தலை' என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 01.12.2025 அன்று பி.ப 3.30 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ அல்லது வேலை நாட்களில் நேரடியாக பதிவாளர் அலுவலகத்தில் கையளிக்கப்படவோ கூடும். (முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது)

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.

மேலதிகமாக, விண்ணப்பத்தின் மென்பிரதி (PDF) மற்றும் தொடர்புடைய ஆவணங்களின் மென்பிரதியினை registrar@rjt.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரியிற்கு மேற்கூறிய திகதி முடிவடைவதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் விண்ணப்பங்கள் முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் கூட்டப்படும்.

விண்ணப்பங்கள் முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டிற்காக மற்றும் நேர்காணலுக்காக பேரவை செயலாளரினால் சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் கூட்டப்படும். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு நேரில் தோன்ற முடியாத நிலையில், செயலாளரிற்குத் தரும் முன்னறிவித்தல் மூலம் நிகழ்நிலையில் (virtual mode) தோன்ற அனுமதிக்கப்படுவார்.

10.04.2023ஆம் திகதிய இல. 03/2023 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும். பதவிக்கு நியமனம் செய்வதற்கான நடைமுறை மேலதிக விபரங்களுக்கு மேற்கூறிய சுற்றறிக்கையினை பார்வையிடவும்.

**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்,**
**இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழகம்.**

29.10.2025